sale. If the hon. Member will bring to the notice of the Government the availability of a mill with up-to-date machinery, we shall certainly consider it."

MR. SPEAKER :—" Questions over."

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

IV.—ANNOUNCEMENTS BY THE SPEAKER.

(1) MESSAGE FROM THE GOVERNOR.

11-10 a.m. MR. SPEAKER :—" I have to announce to the House that I have received the following message, dated the 7th March 1954, from the Governor of Madras :—

' In pursuance of Article 207, Clause (1), read with Article 199 (1) (*d*) of the Constitution of India, I, Sri Prakasa, Governor of Madras, hereby give my recommendation to the introduction in the Madras Legislative Assembly, of the Madras Appropriation Bill, 1954, and in pursuance of Clause (3) of Article 207, I also recommend to that Assembly the consideration of the said Bill. ' "

(2) MESSAGES FROM THE COUNCIL.

MR. SPEAKER :—" (i) I have to announce to the House that I have received a message, dated the 23rd March 1954, from the Hon. the Chairman, Madras Legislative Council, transmitting a copy of the Madras District Boards (Amendment) Bill, 1954 (L.C. Bill No. 4 of 1954), as passed by the Council on the 23rd March 1954 and signed by him for the concurrence of the Assembly.

(ii) I have to announce to the House that I have received messages, dated the 25th March 1954, from the Hon. the Chairman, Madras Legislative Council, transmitting copies of the following Bills, as passed by the Council on the 25th March 1954 and signed by him for the concurrence of the Assembly :—

' (1) The Madras Suppression of Immoral Traffic (Amendment) Bill, 1954 (L.C. Bill No. 6 of 1954).

(2) The Hindu Non-Conforming Marriages (Registration) Bill, 1954 (L.C. Bill No. 5 of 1954).'

(iii) I have to announce to the House that I have received messages, dated the 26th March 1954, from the Hon. the Chairman, Madras Legislative Council, transmitting copies of the following Bills, as passed by the Council on the 26th March 1954 and signed by him for the concurrence of the Assembly :—

' (1) The Madras City Municipal (Amendment) Bill, 1954 (L.C. Bill No. 7 of 1954).

(2) The Courtallam Township Bill, 1954 (L.C. Bill No. 8 of 1954).' "

V.—GOVERNMENT BILL.

THE MADRAS APPROPRIATION BILL, 1954.

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Mr. Speaker, Sir, I beg to introduce the Madras Appropriation Bill[a], 1954, and move—

' *That the Bill be taken into consideration at once.*' "

---

[a] **Published in the *Fort St. George Gazette* extraordinary, dated 26th March 1954.**

27th March 1954]

MR. SPEAKER :—" Motion moved—

' That the Madras Appropriation Bill, 1954, be taken into onsideration at once.' "

SRI M. KALYANASUNDRAM :—" Sir, . . ."

MR. SPEAKER :—" Simply because the Hon. Minister has moved a motion it does not mean that the motion is before the House. *Before* the Speaker says that that motion has been moved and is before the House, hon. Members need not think that the motion as moved by the Hon. Minister is before the House.

" Let me complete what I have got to say. Then Mr. Kalyanasundram may speak. Motion moved—

' That the Madras Appropriation Bill, 1954, be taken into consideration at once.' "

SRI M. KALYANASUNDRAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, ' அப்ரோப்ரியேஷன் பில்லானது ' சபை அங்கத்தினர்களுக்கு இன்று காலையில் தான் கிடைத்தது. இந்த மசோதாவை சபையில் பிரேரிக்க வேண்டுமென்றால் மற்ற மசோதாக்களை இந்த சபையில் பிரேரிப்பதற்கு என்னென்ன விதிகளை அனுசரிப்போமோ அதே விதிகளை அனுசரிப்பது தான் சரியானது என்பது எனது அபிப்பிராயம். ஆனால் நடைமுறையில் இருக்கக்கூடிய சில கஷ்டங்களை நான் உணராமலில்லை. அதுவும் 94 கோடி ரூபாய் சொச்சம் செலவழிப்பதற்கு நிதி மந்திரி அவர்களுக்கு அனுமதி அளிக்கும் மசோதாவை சபையில் இன்றையதினம் காலையில் பிரேரித்துவிட்டு உடனே பாஸ் செய்யவேண்டுமென்று அங்கத்தினர்களை கேட்டுக்கொள்வது சரியல்ல என்று தான் நான் கருதுகிறேன். தொன்னூத்தி நான்கு கோடி ரூபாய் சொச்சம் செலவழிக்க கனம் நிதி மந்திரி அவர்களுக்கு சபை அனுமதி கொடுத்துவிட்டால் அவர் தன்னிஷ்டப்படி செலவழித்து விடுவார் என்ற கவலை எங்களுக்கு இல்லை. ஆனால் எதற்காக இந்தப் பணத்தை கொடுக்கிறோம் என்பதை சபை அங்கத்தினர்கள் எல்லோரும் நன்கு உணர்ந்து, இந்த மசோதாவை அங்கீகரிக்கவேண்டுமென்றால், அவர்களுக்கு இதைப்படித்து ஆராய கொஞ்சம் அவகாசம் கொடுத்தாகவேண்டும். குறிப்பாக எங்களுக்கு ஒரு நாளாவது வேண்டும். திடீரென்று காலையில் மசோதாவைப் பிரேரித்துவிட்டு உடனேயே நாங்கள் அதைப்பற்றி விவாதிக்கவேண்டுமென்று சொன்னால் எப்படி விவாதிக்க முடியும் என்று தான் எனக்குத் தெரியவில்லை."

MR. SPEAKER :—" இருபத்தைந்து நாட்களுக்கு மேலே இதைப் பற்றியெல்லாம் நாம் விவாதித்திருக்கிறோம். அப்படியிருக்கும்போது திடீரென்று கொண்டுவந்திருப்பதாக சொல்லலாமா ? "

SRI M. KALYANASUNDRAM :—" குறிப்பாக ஒரு விஷயத்தைப் பற்றி சொல்ல விரும்புகிறேன். நம் அரசாங்கத்திற்கு வரக்கூடிய வருமானம், எல்லாவற்றையும் மொத்தமாக எடுத்துக்கொண்டு பார்த்தாலும் 45 கோடி ரூபாய். நமது பட்ஜெட்டில் மொத்தம் 45 கோடி ரூபாய் ரெவென்யு காட்டப்படுகிறது. ஆனால் இந்த மசோதாப்படி 94 கோடி ரூபாய் சொச்சம் செலவழிப்பதற்கு அனுமதி கோரப்படுகிறது. இது எப்படி என்று பல அங்கத்தினர்களுக்குப் புரிந்தால் தான் மேற்கொண்டு இதைப்பற்றி விவாதிக்க வசதி ஏற்படும். ஆகவே காலையில் இந்த மசோதாவை சமர்ப்பித்துவிட்டு உடனே அனுமதி கொடுக்கவேண்டுமென்று கேட்பது சரியல்ல என்பதே எனது அபிப்பிராயம்."

MR. SPEAKER :—" I wish to inform the House that Article 204 of the Constitution says—

' *As soon as* may be after the grants under Article 203 have been made by the Assembly there shall be introduced a Bill to provide for the appropriation out of the Consolidated Fund of the State of all moneys, etc., etc.'

" I want hon. Members to note the word ' as soon as ' occurring in the beginning of Article 204."

* **SRI M. KALYANASUNDRAM** :—" ' As soon as ' என்று அரசியல் சட்டத்தில் சொல்லியிருக்கலாம். ஆனால் அதற்காக மெம்பர்களுக்கு அதைப் படித்துப்பார்த்து புரிந்து கொண்டு விவாதம் நடத்துவதற்கு ஒரு நாள்கூட அவகாசம் கொடுக்கக்கூடாது என்று சொல்லியிருப்பதாக அதனை அர்த்தம் கொள்ள முடியாது. குறிப்பாக ஒரு விஷயத்தைச் சொல்லுகிறேன். சென்ற இருபத்தைந்து நாட்களாக நாம் வரவுசெலவுத் திட்டத்தில் ஒவ்வொரு மானியமாக எடுத்துக்கொண்டு இந்தச் சபையில் விவாதம் நடத்தி ஒவ்வொரு மானியத்திற்கும் அனுமதி அளித்து வந்திருந்தாலும்கூட பல அங்கத்தினர்களுக்கு, அவர்கள் இந்தப் பக்கத்தில் இருப்பவர்களாக இருந்தாலும் சரி, அந்தப் பக்கத்தில் இருப்பவர்களாக இருந்தாலும் சரி. பட்ஜெட்டில் கூறியிருக்கக்கூடிய புள்ளி விவரங்களை சரியான முறையில் படித்துக்கொண்டு விவாதம் நடத்த முடியவில்லை, என்பதை நாம் அறிவோம்."

MR. SPEAKER :—" It is an insult to the House. The hon. Member should not use such observations as amount to an insult to the House."

* **SRI M. KALYANASUNDRAM** :—"நான் அங்கத்தினர்கள் சரியாகப் புரிந்து கொண்டு விவாதம் நடத்தவில்லை யென்பதாக சபையின் கௌரவத்தைப் பாதிக்கக்கூடிய வகையில் சொல்லவரவில்லை. பட்ஜெட் சம்பந்தமான புத்தகங்களில் கொடுக்கப்பட்டிருக்கும் விவரங்களை அங்கத்தினர்களால் சுலபமாகப் புரிந்து கொள்ளக்கூடிய முறையில் அமைக்கவில்லை யென்று சர்க்காரைத்தான் குற்றம் சாட்ட விரும்புகிறேன். நான் இப்பொழுது கூறுவது என்னவென்றால் : இந்த அப்ரோப்ரியேஷன் ' பில்லை ' திங்கள்கிழமையன்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளலாம். அதற்குள் இந்த மசோதாவை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பினால் அங்கே அங்கத்தினர்கள் வருவார்கள். சர்க்கார் நிதி இலாக்கா காரியதரிசியும் அங்கே வந்து எதற்காக எப்படி எப்படி பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை விளக்கினால் எல்லா அங்கத்தினர்களும் அதைச் சுலபமாகப் புரிந்து கொள்ளமுடியும். அதன் பின் இந்தச் சபையில் அது விவாகத்திற்கு வந்தால் எல்லா அங்கத்தினர்களும் நன்றாகப் புரிந்துகொண்டு விவாதம் செய்ய முடியும் என்பதுதான் என் யோசனை. இதை சர்க்கார் பரிசீலிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்."

* DR. K. B. MENON :—" Sir, I rise to completely support the demand made by the hon. Member Sri Kalyanasundaram. Hon. Members might have read in the papers about the delegation of powers by the Executive and the risks that are involved in it with regard to the British Parliament."

MR. SPEAKER :—" What has that to do here? I think the hon. Member has confused himself thoroughly. We have not delegated any power to anybody. We have not delegated even a single point. We have passed item by item all the demands that came before the House for discussion."

* DR. K. B. MENON :—I am mentioning it only to emphasise the point that the Opposition Members here have always been groping in the dark and that we have no information on hand when we pass Bills or when we have to pass appropriations of money out of the Consolidated Fund of the State. It is absolutely essential that

27th March 1954] [Dr. K. B. Menon]

Government should educate and make available to us all information possible because we must know beforehand what is it that we have to support when such things are placed before us."

MR. SPEAKER :—" The hon. Member has not properly understood the meaning of the term 'delegated legislation'. We have not delegated any power to Government. If this House gives powers to the Court to make rules then, we delegate certain powers to Government. The hon. Member should know that we have proposed certain amendments to our rules of procedure by which we will have a committee which will have power to go into the delegated legislations. The hon. Member is a member of the Rules Committee. I am sorry he has not understood the matter clearly. I can inform the House that we have passed each demand item by item and we have not delegated even a single point.

" Coming to the Appropriation Bill, I wish to inform the House, as I have mentioned already, that Article 204 begins thus—

> **' As soon as may be after the grants under article 203 have been made by the Assembly, there shall be introduced a Bill to provide for the appropriation, etc. . . .'**

" Therefore, according to Article 204, as soon as the demands have been granted by the House, the Appropriation Bill must come before the House."

SRI M. KALYANASUNDRAM :—" ஸார், **Delegated legislation** ஐவிட இது மிகவும் முக்கியமானது. அதில் சர்க்காருக்கு விதி செய்யக் கூடிய அதிகாரத்தைக் கொடுக்கிறோம். ஆனால், **Appropriation Bill**-ல் **94** கோடி ரூபாய் பணத்தைச் செலவழிக்கக்கூடிய அதிகாரத்தைக் கொடுக்கிறோம்."

MR. SPEAKER :—" **This is an important point. Hon. Members should listen to what I say carefully**. ஒரு மான்யத்திற்காக ஒதுக்கப்பட்ட பணமானது இன்னொரு மான்யத்திற்குப் போனாலும், அதிகமாகப் பணம் வேண்டியிருந்தாலும் **Supplementary Grant**-ல் வரவேண்டும். ஆகையால், சட்டசபையானது எந்தெந்த மான்யத்திற்கு எவ்வளவு பணத்தை ஒதுக்குகிறதோ, பட்ஜெட்டில் எதை ஒதுக்குகிறதோ, அதைத்தான் சர்க்கார் செலவு செய்யவேண்டும். அதற்குமேல் ஒரு பைசா கூட செலவு செய்யக்கூடாது. ஒதுக்கிய பணத்திற்குமேல் ஒரு **dust** கூட அவர்கள் அதிகமாக செலவு செய்ய முடியாது—**dust** என்று நான் சொல்லும்போது கனம் அங்கத்தினர்கள் தப்பிதமாக அர்த்தம் செய்துகொள்ளமாட்டார்கள் என்று நம்புகிறேன். **The Hon. Minist r for Finance will now reply.**"

SRI S. RAMALINGAM :—" Before the Hon. Minister replies, I shall make one submission, Sir. அதாவது, கனம் அங்கத்தினர் ஸ்ரீ கல்யாணசுந்தரம் எழுப்பிய பிரச்னையல்லாத வேறு சில விஷயங்களை இப்பொழுது தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். குறிப்பாக நம்முடைய வரவு செலவுக் கணக்கிலே ரூ. **48** கோடி சொச்சம் ரூபாய் . . ."

MR. SPEAKER :—" மந்திரி அவர்களை **explain** பண்ணச் சொல்லுகின்றேன்."

SRI S. RAMALINGAM :—" பட்ஜெட் பிரசங்கத்திலே மற்ற கணக்குகளும் காணப்பட்டிருக்கின்றன. ஆனால், மொத்த மான்யம் கோரியிருப்பது ரெவினியூ இனச் செலவுக்காக ரூ. **48** கோடி, **93** லட்சம் ரூபாயாகும். இம்மாதிரி அதிகமான ரூபாய் மீண்டும் நம்மிடம் கோரப்படுகிறது.

[Sri S. Ramalingam] [27th March 1954

இது விஷயத்தைப்பற்றி மந்திரி அவர்கள் சில விளக்கங்கள் கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலும், போதிய விளக்கம் தேவையென்றால், ஒவ்வொரு பட்ஜெட்டிலும் என்ன இனம் அதிகமாக வருகிறது. எப்படி செலவு செய்யப்படுகிறது என்ற முழு விவரமும் அறிவதற்கு எங்களுக்கு சந்தர்ப்பம் கொடுத்தால்தான் திருப்தியடைந்து நாங்கள் இதற்கு வோட்டு அளிப்பதற்கு சந்தர்ப்பப்படும். மந்திரி அவர்கள் பட்ஜெட் பிரசங்கத்தில் கொடுத்திருக்கும் விளக்கங்கள் எங்களுக்கு திருப்தி அளிக்கவில்லை. அதற்கு விளக்கம் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்."

Mr. SPEAKER :—" I will ask the Hon. the Minister for Finance to explain it."

11-20 a.m. * Dr. K. B. MENON :—" I never for a minute intended to suggest that there had been a delegation of powers. I only cited that as an example to show that the co-operation of the Opposition is not sought, that the Opposition has no control over what the Government are doing and that, therefore, we should be kept informed. My point is that our co-operation should always be made possible by the Government."

Mr. SPEAKER :—" I would tell the hon. Members that this Appropriation Bill is only an innovation introduced by the Constitution. Before the introduction of the Constitution, we did not adopt all procedure. We have copied it from other countries. This is a mere formality which we are going through."

* Sri K. VINAYAKAM :—" Sir, on a point of information. The Government were good enough to supply enough literature on the Budget. Along with that literature, they gave a small pamphlet entitled 'An Introduction to the Budget'. It contains all the relevant information that the hon. Members from the Opposition require. I commend that book to be read by everybody. If hon. Members had gone through that book, there would not have been any need for discussion, because the Appropriation Bill is a legislative process which should be automatically gone through without much discussion."

(The hon. Member Dr. K. B. Menon stood up in his place.)

Mr. SPEAKER :—" The hon. Member seems to think that this is a debate. This is not at all a debate."

* Sri K. PARTHASARATHY :—" I understood the Deputy Leader of the Opposition to have made two demands, namely, that time should be allowed for consideration of the Bill and that opportunity should be given to suggest amendments to the Bill, if necessary by sending it to a Select Committee. But I want to submit that according to the rules, if I understand them aright, no amendments can be proposed."

Mr. SPEAKER :—" No amendments shall be proposed to any such Bill. The Constitution is clear in this respect."

27th March 1954]

SRI K. PARTHASARATHY :—" Since no amendments can be proposed, no useful purpose will be served by sending the Bill to a Select Committee. There is no case made out for sending it to a Select Committee. We would not be in order in postponing the discussion since the Governor has fixed to-day for discussion."

MR. SPEAKER :—" I will read Article 204 (2) of the Constitution for the information of the hon. Members. It says : 'No amendment shall be proposed to any such Bill in the House or either House of the Legislature of the State which will have the effect of varying the amount or altering the destination of any grant so made or of varying the amount of any expenditure charged on the Consolidated Fund of the State, and the decision of the person presiding as to whether an amendment is inadmissible under this clause shall be final.' The Hon. the Finance Minister will now explain."

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" Sir, with regard to the increased amount shown in the Appropriation Bill as compared to the various demands voted upon by the Legislature, I request the hon. Member's attention to the Appropriation Bill itself. Column (3) shows the amount voted by the Legislative Assembly under the various Demands. There can be no difference between the amount mentioned in column (3) and the amount voted by the Assembly. If there has been any cut which has been accepted by the House, perhaps there will be a variation. If no amount is charged on the Consolidated Fund of the State, then the total will be the same. The hon. Member will find that under the last item 'Public Debt—Repayment' a sum of Rs. 12 crores and odd is shown. This represents the various advances which we are making and getting back. To cover all the transactions we have provided Rs. 12 crores and odd. It is not an expenditure. That is the gross amount we will be taking and putting back. If all the items are added, the total comes to Rs. 94 crores and odd. This matter has been already explained by me during the first Budget Debate when I introduced the Appropriation Bill. When we discussed the second Budget also, this matter was raised. Now this is the third time that clarification is sought for. I think hon. Members have not been quite attentive to this aspect of the matter. Therefore, it is the total gross withdrawal from the Consolidated Fund that we have shown. Once the amount goes into the Consolidated Fund, if we want to withdraw it, we have to get the sanction of the Legislature. For example, suppose some amount is put into the Treasury being the receipts from the sale of rice. If the Government want to purchase rice again, they cannot take this amount saying that it is only towards the purchase of rice, that it has been put into the Treasury and that it is required only for the purpose of State Trading Schemes. For that purpose also, sanction of the Legislature should be obtained in the form of an Appropriation Bill. The sum of Rs. 12 crores and odd represents the various advances for which we have made provision. It is not a net expenditure. To that

[Sri C. Subramaniam] [27th March 1954

extent, we will be putting money into the Exchequer. Therefore, this sum of Rs. 94 crores and odd represents the estimate of the gross drawing which we will be making from the Consolidated Fund.''

MR. SPEAKER :—'' I wish to inform the hon. Members that we must finish this Appropriation Bill before Lunch. In the afternoon there will be the general discussion on the Supplementary Statement of Expenditure for the second six months of 1953–54.''

SRI M. KALYANASUNDRAM :—'' Sir, this Bill should have been circulated at least yesterday evening.''

MR. SPEAKER :—'' In future it will be done so.''

11-27 a.m. *SRI N. K. PALANISAMI :—'' கனம் சபா நாயகர் அவர்களே, இதுவரை பல மான்யங்கள் நிறை வேற்றப்பட்டுவிட்டன, மந்திரிகள் ஒவ்வொருவரும் அவரவர்களுடைய இலாக்காக்களில் எவ்வளவு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன என்றும், 1952–ம் வருஷத்திலிருந்து இது வரைக்கும் எந்தந்த திட்டங்கள் அபிவிருத்தியடைந்துள்ளன என்றும் சொன்னார்கள். உண்மையாகவே நாட்டில் நல்ல நிலைமை ஏற்பட்டிருக்கிறதா என்று கேட்டால், இல்லையென்றுதான் நாம் சொல்ல வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். வியாபாரமந்தம் ஏற்பட்டிருப்பதன் காரணமாக லட்சக்கணக்கான பேர்களுக்கு வேலைகிடைக்காமல் இருக்கிறது.

'' உதாரணமாக, இன்று இருக்கக்கூடிய நிலைமையில், ஸிட்னியில் நடந்த நிதி மந்திரிகள் மகா நாட்டை எடுத்துக் கொண்டாலும் சரி, பிப்ரவரி 8–ந் தேதியிலிருந்து 18–ந்தேதி வரை கண்டியில் நடந்த ஆசிய தூரக் கிழக்கு பொருளாதார மகா நாட்டினுடைய ரிபோர்ட்டை எடுத்துக்கொண்டாலும் சரி, பெரிய பொருளாதார நெருக்கடி உலகம் பூராவிலும் பரவி வருகின்றது. குறிப்பாக ஆசியாவிலும், தூரக் கிழக்கு நாடுகளிலும் பெரும் அளவுக்கு நெருக்கடி எற்படப்போகிறது என்பது நமக்கு நன்றாகத் தெரியும், உதாரணமாக உலகம் பூராவும் நெருக்கடி ஏற்பட்டுக் கொண்டிருக்கக் கூடிய காலத்திலே, அமெரிக்காவிலே என்ன செய்கின்றார்கள்? ஐசன்ஹோவர் பல கோடிக்கணக்கான டாலர் பெறுமான விவசாயப் பொருள்களை வாங்கி, அதை ஜனங்களுக்கு உள் நாட்டில் விநியோகிக்காமலும், வெளி நாட்டில் விநியோகிக்காமலும் அப்படியே வைத்துக்கொண்டு இருக்க ஒரு திட்டம் போட்டிருக்கிறார். அது மட்டுமல்ல விவசாயத்திற்கு லாயக்குள்ள நான்கில் ஒரு பங்கு நிலங்களைத் தரிசாக விட்டு வைக்கவும் யோசிக்கிறார். பிரிட்டனிலும் இம்மாதிரி நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருக்கிறதுதென்று தெரிகிறது. அமெரிக்கா ஒரு தடை போட்டிருந்தால் கூட சோவியத் நாட்டுடனும், கிழக்கு ஐரோபிய நாடுகளுடனும் தடை போட்டிருந்த போதிலும் இன்று அவர்கள் அந்தத் தடையை மீறி ஒரே நாளில் ஐந்து தேசங்களுடன் வியாபார ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரி பல தேசங்கள் நெருக்கடியிலிருந்து தப்புவதற்கு நடவடிக்கை எடுக்கும்போது, ஏன் நம்முடைய சர்க்காரும் மத்திய சர்க்காரும் கும்பகர்ண தூக்கம் போட வேண்டும், இந்த நெருக்கடியான நிலைமையை சமாளிப்பதற்கு ராஜ்ய சர்க்காரிடத்திலும் சரி, மத்திய சர்க்காரிடத்திலும் சரி, ஒரு திட்டமும் கிடையாது, ஜனங்களுக்கு நிவாரணம் கிடைப்பதற்கு எந்த விதமான உத்திரவாதமும் கிடையாது என்பதைத் தான் பார்க்கிறோம்.

'' இந்த சர்க்காருடைய சட்டம் போடும் கொள்கையை எடுத்துக் கொண்டாலும் சரி, வரி போடும் கொள்கையை எடுத்துக் கொண்டாலும் சரி, ஜனங்களுடைய பிரச்னைகளைக் கணக்கில் எடுப்பது கிடையாது. விவசாயிகள் கடன் ஒத்தி வைப்பு சட்டமானது உண்மையிலேயே ஜனங்களுடைய

27th March 1954] [Sri N. K. Palanisami]

பிரச்னையைத் தீர்ப்பதற்கு போடப்பட்டதா? கிடையாது. உண்மையாகவே விவசாயிகளுக்கு கடன் தொல்லையிலிருந்து விடுதலை அளிக்க வேண்டு மென்ற எண்ணம் சர்க்காருக்கு இருக்குமானால், கடன் ஒத்தி வைப்புச் சட்டத்தை ஐந்து வருஷங்கள் வரையில் அமுலிலிருக்கும்படிச் செய்தி ருக்க வேண்டும், அல்லது உடனடியாகவே குறைந்த வட்டியில் கடன் கிடைக்க வசதி செய்திருக்கவேண்டும். அந்தமாதிரி சர்க்கார் செய்யவில்லை.

" 1937-வது வருஷத்தில் காங்கிரஸ் காரியக் கமிட்டி புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ் **M.L.A.**க்களுக்கு என்ன உத்தரவிட்டது? சர்க்கார், உடனடியாக ஒரு கமிட்டியை ஏறபடுத்தி, அநியாயக் கடன்களை ரத்து செய்யவும், கடன்களைப் படிப்படியாகக் குறைப்பதற்கு சட்டம் கொண்டு வரவேண்டுமென்று உத்திரவிட்டது என்பதை சர்க்கார்க்கு ஞாபகபடுத்த விரும்புகிறேன்.

" மேலும், பவநகர், சௌராஷ்டிராவுடன் சேருவதற்கு முன்பு, குறை ந்த அளவிலும், கொஞ்சம் கொஞசமாகக் கடனை அடைப்பதற்காகவும் கடன் குறைப்புச் சட்டம் **(Debt Reduction Act)** என்று பவ நகரில் ஒரு சட்டம் அமுலிலிருந்து வந்தது. இம்மாதிரி பல சட்டங்கள் அமுலில் இருந்து வந்தன.

" இதே மாதிரி கிரேக்க சரித்திரத்தில் அட்டிக்காவிலுள்ள விவசாயி கள் கடனால் பாதிக்கப்பட்டு அடிமைகளாக இருந்த காலத்தில், **Solon, with a stroke of the pen, cancelled all the debts.** கிரேக்க சரித்திரத்தில் ஸோலன் செய்த மாதிரி சில இருக்கக்கூடிய மந்திரிகள் செய்ய வேண்டு மென்று நான் கேட்க வில்லை. உண்மையாகவே விவசாயிகளுடைய பிரச் சனைகளைத் தீர்க்க வேண்டும், உண்மையாகவே விவசாயிகளைக் கடன் தொல்லையிலிருந்து நீக்கவேண்டுமென்ற விருப்பம் சர்க்காருக்கு இருந்திருந்தால், கடன் ஒத்திவைப்புச் சட்டத்தை ஐந்து வருஷங்களுக் காவது கண்டிப்பாக நீடித்திருக்க வேண்டும்.

" சர்க்காருடைய வரி விதிப்புக் கொள்கையை எடுத்துக் கொண்டாலும் எங்கோ கொஞ்சம் வரி போடுவதன் மூலமாக 40 லட்சம் ரூபாய் வரை யில் வசூல் செய்ய உத்தேசித்திருக்கிறார்கள். இது மானக்கேடான விஷயமா கும். உண்மையாகவே **Plantation** கள் எத்தனை ஏக்ராக்கள் இருக் கின்றன? ஒவ்வொரு ஏக்கரிலிருந்தும் எவ்வளவு வரும்படி வரு கிறது? **Plantation** முதலாளிகள் அடிக்கக்கூடிய கொள்ளை லாபத்தில், வரி வசூலிக்கக் உத்தேசித்திருக்கின்ற 40 லட்சம் ரூபாய் மிகவும் குறைவான தொகையாகும். இந்த மாதிரி வரிதான் போடப் படுகிறதே தவிற, உண்மையாகவே எவ்வளவு வரி போட வேண்டு மென்ற முறையிலே போடுவதில்லை. ஆகவே இந்த வரி போடும் கொள்கை யிலும், சட்டம் போடும் முறையிலும் ஜனங்களுடைய பிரச்னைகள் என்னவென்பதையே கவனிப்பதில்லை. **It is like treating the symptom and not the disease.** அதாவது உண்மையான வியாதியைத் தீர்ப்பதற்குப் பதிலாக, **symptom**-கள் தீர்க்க உத்தேசிக்கப்படுகின்றன இதுதான் சர்க்காருடைய கொள்கையாக இருந்து வருகிறது.

" அடுத்தபடியாக ஐந்து வருஷத் திட்டத்தில் முக்கியமாக மத்திய சர்க்கார் ஒதுக்கியுள்ள 318 கோடி ரூபாய் செலவில் 85 லட்சம் ஏக்கராக் களுக்குத்தான் தண்ணீர் பாய்ச்சுகின்றார்கள். ஆனால், அதே சமயம் மைனர் இர்ரிகேஷனுக்கு ஒதுக்கியிருக்கும் பணம் 72 கோடி ரூபாய்தான். அதில் 1 கோடி 20 லட்சம் ஏக்கர்களுக்கு தண்ணீர் பாய்ச்சும் திட்டம் போட்டிருக்கிறார்கள். சாதாரணமாக, பெரிய பெரிய திட்டங்களைவிட சிறிய திட்டங்களினால்தான் ஜனங்கள் அதிக பலனை அடையமுடியும். ஆகவே, இந்த ராஜ்யத்தில் சிறிய சிறிய குளங்களைக் கட்டுவதற்குப் பல திட்டங்களைப் போடவேண்டும். உணவு உற்பத்தித் திட்டங்கள், தேசீய விஸ்தரிப்புத் திட்டங்கள், கிராமாபிவிருத்தித் திட்டங்கள் போன்ற பல திட்ட டங்கள் இருந்தாலும் அனேகமாக அவைகளெல்லாம் ஒரே வேலையைத் தான் செய்துவருகின்றன. உணவு அபிவிருத்தித் திட்டங்களுக்காக

ஒதுக்கப்படும் பணத்தில் சர்க்காருக்கு ஏற்படும் **Establishment charges** மட்டும் **31** சதவீதம் ஆகிறது. சமூக அபிவிருத்தித் திட்டங்களை எடுத்துக் கொண்டால் கிட்டத்தட்ட **60** சதவீதம் வரை **Establishment charges** க்குப் போய்விடுகிறது. பல டிபார்ட்மெண்டுகளை எடுத்துக்கொள்ளும் போது அந்தந்த திட்டங்களுக்கு செலவழிப்பதில் பாதிப்பணம் அதிகாரிகள் சம்பளத்திற்காக செலவிடப்படுவதால் எந்தவிதமான பிரயோஜனமும் கிடையாது. மேலும், இந்தத் திட்டங்களை ஜனங்கள் மத்தியில் பிரசாரம் செய்து, ஜனங்களுக்குத் திட்டங்களில் நம்பிக்கை உண்டாகும்படி செய்வதும் இந்த சர்க்காருக்குத் தெரியாது. உதாரணமாக, ஈரோட்டில் இந்தத் திட்டம் சம்பந்தமாக ஒரு லட்சம் ரூபாய் அதிகாரிகளுக்காகவே செலவிடப் பட்டிருக்கிறது. அதாவது மூன்றிலொரு பங்கு செலவிடப்பட்டிருக்கிறது. இன்னும் அந்த வேலை நடக்கவில்லை. போட்ட திட்டப் பிரகாரம் வேலை நடக்கவில்லை.

"இந்த மாதிரி நிலைமை இருக்கும்போது உண்மையாகவே சிறு நீர்ப்பாசனத் திட்டங்களில் சர்க்கார் கவனம் செலுத்தாமல் அமராவதி, வைகைத் திட்டங்களை மட்டும் நிறைவேற்றுவதால் ராஜ்யத்திலுள்ள விவசாய மக்களின் வயிறு நிரம்பிவிடாது. அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவேண்டுமென்ற எண்ணம் சர்க்காருக்கு உண்மையாக இருக்குமானால் ஒவ்வொரு பிர்க்காவிலும் எந்தெந்த திட்டங்கள் அங்கு இருக்கக் கூடிய ஜனங்களுடைய நிலைமையை உயர்த்தமுடியும் என்று கவனிக்க வேண்டும். சர்க்கார் திட்டமிட்டிருக்கும் சிறு நீர்ப்பாசனத் திட்டங்களைச் செய்யவேண்டுமென்று சொல்லும்போது, குட்டைகளை மட்டும் ஏற்படுத்தி விட்டால் போதாது. சிறிய குளங்கள் ஏற்படுத்தலாம், வெள்ளையர்கள் இருந்த காலத்தில் தூர்ந்து போன குளங்களைப் பட்டா செய்து கொடுத்ததால் குளங்கள் மராமத்து செய்யமுடியவில்லை. சர்க்கார் அங்கிருக்கக் கூடிய ஜனங்களைக் கேட்டால் ஏகர் இரண்டாயிரம் மூவாயிரம் ரூபாய் விலை ஆகிறது. வாங்கிக் கொடுத்தால் குளம் கட்டுவோம் என்று சொல்லுகிறார்கள். உதாரணமாக, கோயமுத்தூர் ஜில்லாவில் **87** குளங்கள் இருக்கின்றன. சித்தூர் ஜில்லாவில் **2,700** குளங்கள் இருக்கின்றன. கோயமுத்தூர் ஜில்லா எப்பொழுதும் இந்த மாதிரி வறண்டிருக்கக்கூடிய காரணத்தினால், நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான குளங்கள் தூர்ந்துவிட்டன. **87** குளங்கள் என்பது நமக்குத் தெரியும். இதைப் பற்றி சுதேசமித்திரன், இந்து பத்திரிகைகள் ஒரு மாதத்திற்குமுன் எடுத்துக் காட்டி இருக்கின்றன. இன்னும் பல குளங்களையும் கிராமாதிகாரிகள் இன்னும் பட்டா செய்து கொடுப்பதால் அங்கு இருக்கக்கூடிய குளங்கள் ஆர்ஜிதச் சட்டத்தைத் திருத்துவதற்கு நாம் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

"வாங்கும் சக்தியைப்பற்றி பிரமாதமாகப் பேசப்பட்டது. வாங்கும் சக்தியைப்பற்றி பேசுவதில் மட்டும் பிரயோஜனமில்லை. விலை, வாங்கும் சக்தி இரண்டையும் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும். உதாரணமாக, ஒரு பொருளின் விலை கொஞ்சங் கொஞ்சமாக ஏறிக் கொண்டே போகும்போது, வாங்கும் சக்தி கொஞ்சங் கொஞ்சமாக ஏறிக்கொண்டு போகவேண்டும். பொருளின் விலை கொஞ்சம் இறங்கியவுடன் வாங்கும் சக்தி பாதாளத்தில் விழுகிறது. உதாரணமாக, கெஜட்பதிவில்லாத உத்தியோகஸ்தர்கள் ஒரு அணு கொடுத்து இட்டிலி சாப்பிட வேண்டுமானால் ஒன்றிரண்டு சாப்பிடுவார்கள். இட்டிலியின் விலை அரை அணுவுக்கு வந்து, ஒன்றிரண்டு இட்டிலிகள் அதிகமாகச் சாப்பிடலாம் என்று அவர்கள் போகும்போது, வேலை போகக்கூடிய நிலைமை வந்துவிடுகிறது. உணவு விலை குறைந்துவிட்டது என்று கனம் நிதி அமைச்சர் அவர்கள் பிரமாதமாக சந்தோஷப்படுவது உண்டு. உணவு விலை உண்மையாக குறைந்துவிட்டது என்று சொன்னால், ஏற்கெனவே ஏராளமான அரிசி வெளிநாடுகளிலிருந்து வந்திருக்கிறது ; ஏராளமான மழை பெய்து, வெள்ளாமையும் அதிகரித்திருக்கிறது. இருந்தபோதிலும் அன்று இருந்ததைவிட விலை அதிகமாக இருந்த காலத்தைவிட குறைந்துவிட்டாலும் இன்றைக்கு இரண்டு மடங்கு ஜனங்கள் பட்டினி இருக்கிறார்கள். அவர்கள்

27th March 1954] [Sri N. K. Palanisami]

சொல்வதுபோல் ஜனங்களுக்கு அதிக சௌகரியம் ஏற்பட்டிருக்கிறதென்றால் தகாது. ஆனால், அதிகமான அரிசியை வைத்துக்கொண்டு சமையல் செய்து சாப்பிடுவதற்கு சோம்பேறித்தனமாகவா பட்டினியாய் சுற்றுகிறார்கள். ஆகவே, உண்மையாக விலை குறையக் குறைய வாங்கும் சக்தி இன்னும் மோசமான அளவுக்கு போய்விட்டதைத்தான் குறிப்பிடுகிறேன்.

"வேலையில்லாத் திண்டாட்டத்தைப்பற்றி பிரமாதமாகப் பேசப்பட்டது. மத்திய சர்க்காரை எடுத்துக்கொண்டாலும் சரி ராஜ்ய சர்க்காரை எடுத்துக்கொண்டாலும் சரி வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னை பெரும் பிரச்னையாக இருக்கிறது. இதைத் தீர்ப்பதற்கு மாகாண சர்க்காரால் முடியவில்லை ; இந்த சர்க்கார் கடைபிடிக்கும் கொள்கையினால் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கமுடியாது. ஆனால், அந்த பிரச்னையைத் தீர்க்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது என்று நாங்கள் சொல்லுகிறோம். இவ்வளவு கஷ்டங்கள் இருக்கும்போது ஏன் இவர்கள் அதிகாரத்தில் இருந்துகொண்டிருக்கவேண்டும் ஜனங்களுடைய கஷ்டத்தைத் தீர்க்கமுடியாத சர்க்கார் ஏன் அதிகாரத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கவேண்டும் ? அன்றையதினம் பாராளுமன்றத்தில் (**Parliament**) இந்திய பிரதம மந்திரி நேரு அவர்கள் பேசும்போது வேலையில்லாத் திண்டாட்டத்தை தீர்ப்பதற்கு நாங்கள் கைத்தொழிலை அபிவிருத்தி செய்யப் போகின்றோம், அதற்குவேண்டிய ஏற்பாடுகளை செய்யப்போகின்றோம் என்று சொல்லுகின்றார். ஆனால், அதே சமயத்தில் டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் பேசும்போது, 'கைத்தொழிலுக்கு மான்யம் கொடுக்கவேண்டுமா ? ஏன் மான்யம் கொடுக்கவேண்டும் ? பணத்திற்கு எங்கே போவது என்று சொல்லுகிறார். முதலீடு அபிவிருத்தி செய்வதைத்தவிர, 200 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவேண்டுமானால் . . ."

VI.—ANNOUNCEMENT *RE* TRANSPORT FACILITIES AFTER THE NIGHT SESSION OF THE ASSEMBLY ON 27TH MARCH 1954.

MR. SPEAKER :—"The Hon. Minister for Transport wants to make an announcement." 11–40 a.m.

* THE HON. DR. U. KRISHNA RAO :—"The Assembly is sitting from 8 to 11 o'clock tonight. I presume Members would like to have bus facilities to go to their houses. I should like them to give their names to the Legislature Office before 1 o'clock this afternoon. I am saying this because, on the last occasion there were only two passengers on the Mylapore route, one passenger on the Kilpauk route and twenty passengers on the Georgetown route. The House will admit that it will be most uneconomical to run a bus for the sake of one or two passengers. Unless twenty passengers at least come forward, it will be most difficult to arrange for buses, for we remove these buses from the theatres and put them on this work."

MR. SPEAKER :—"One bus can take all the Members. It can go to Georgetown, from there to Kilpauk and then to Mylapore."

DR. K. B. MENON :—"I think these night sessions are very inconvenient and taxing. Even if there is only one Member, I think a bus should be provided."

MR. SPEAKER :—"I am suggesting that a single bus could take all the hon. Members drop them in their places, and then go to the shed. That is what the school buses do for conveying students."